29.01.2026 OS.No.75/2022 PW1 Name :.மேனகா

2 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் மற்ற வாதிகளுக்கும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன். 1ம் பிரதிவாதி என்னுடைய தாயார். அவர் தனியாக குடியிருக்கிறார். ஒரே வீட்டில் தனியாக வசிக்கிறார். எனக்கும் அவருக்கும் விரோதம் எதுவும் இல்லை. அவருக்கும் சொத்தில் பாத்திய உரிமை உள்ளது. சொத்தின் சர்வே எண் என்னால் சொல்லமுடியாது. என்னுடைய தாத்தா சொத்து மூலமாக நான் சொத்தில் உரிமை கேட்கிறேன்.
2. என் தாத்தா பெயர் பெருமாள்கவுண்டர். அவருக்கு சொத்து அவருடைய அப்பா மூலமாக கிடைத்துள்ளது. அந்த விவரத்தை வழக்குரையில் சொல்லவில்லை. பெருமாள்கவுண்டர் 1977ல் இறந்துவிட்டார். சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் இறந்துள்ளதாக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பெருமாள்கவுண்டரின் வாரிசுகள் தான் சாமிநாதன், நடராஜன், தசரதன் என்றால் சரிதான். சாமிநாதன் 5ம் பிரதிவாதியின் தகப்பனார்.
3. 2 முதல் 7 பிரதிவாதிகள் சாமிநாதன் குடும்பத்தை சார்ந்தவர்கள் தான். நாங்களும் 1ம் பிரதிவாதியும் நடராஜன் வாரிசுகள். தசரதனுக்கு வாரிசுகள் இல்லை. வாரிசுகள் இல்லாமல் இறந்துவிட்டார். பெருமாள்கவுண்டர் உயிருடன் இருக்கும்போதே அவருடைய வாரிசுகளுக்கு சொத்தில் பங்கு கொடுத்துள்ளார் என்றால் வாய்மொழியாக கொடுத்துள்ளார். யார் யாருக்கு எவ்வளவு சொத்து

எந்ததெந்த சர்வே எண்ணில் கொடுக்கபட்டது என்பது என்னால் சொல்ல முடியாது.

4. வழக்குரையில் அதை கூறியுள்ளேன். அதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நடராஜன் அவருடைய பாக சொத்தில் ஒரு பகுதியை சாமிநாதனுக்கு கிரையம் கொடுத்துள்ளார். மற்றொரு பகுதியை சித்தப்பகவுண்டருக்கு கிரையம் கொடுத்துள்ளார். நடராஜனுக்கு வீட்டு இடம் உள்ளது. அதன் சர்வே எண் என்னால் சொல்லமுடியாது தோராயமாக சுமார் 5 செண்டிற்கும் குறைவாக தான் இருக்கும். அந்த வீட்டு இடத்திற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்று தெரியவில்லை.

5. என் தகப்பனார் சாமிநாதனுக்கு கிரையம் கொடுத்த சொத்தையும் வழக்கில் சேர்த்துள்ளேன். அந்த சொத்தின் சர்வே எண் விஸ்தீரணம் சொல்லமுடியாது. சாமிநாதன் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தை ரத்து செய்ய வழக்கில் பரிகாரம் கேட்கவில்லை. அந்த ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். ஆனால் அதை படித்து பார்த்தது இல்லை. 1984ல் சேகர், சரவணன் ஆகியோர்கள் இருந்தார்கள். அவர்கள் நடராஜனின் பிள்ளைகள் தான். கிரைய தேதியில் அவர்கள் இளவர்களாக இருந்தார்கள்.

6. அவர்கள் இருவரும் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார்கள். தற்போது உயிருடன் இல்லை. 1984ல் என் தகப்பனார் அந்த கிரைய ஆவணத்தை அவருக்காகவும் இளவர்களுக்காகவும் சேர்த்து கொடுத்துள்ளார் என்றால் எங்களை மறைத்து அவ்வாறு கொடுத்துள்ளார். எனக்கு தற்போது 55 வயது ஆகிறது. எந்த ஆண்டு பிறந்தேன் என்று நியாபகம் இல்லை. என்னுடைய வயதை

காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். சேகர், சரவணன் பற்றிய விவரங்களை வழக்குரையில் சொல்லியுள்ளேன்.

7. நானும், சத்யாவும் சேகர் சரவணனுக்கு முன் பிறந்துள்ளோம். மணிகண்டன் கடைசி மகன். 1984க்கு முன்னர் பிறந்துள்ளார். அதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். 1984ல் எனக்கும் சத்யாவிற்கும் சொத்தில் பாத்திய உரிமை இல்லை என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் மணிகண்டன் பிறக்கவில்லை என்றால் சரியல்ல. சாமிநாதனுக்கு கிரையம் கொடுத்தது 35 செண்ட் என்றால் சரிதான். அதை வழக்குரையில் 13 ஏர்ஸ் என்று தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த 35 சொத்திற்கான செக்குபந்தி எதையும் வழக்கில் குறிப்பிடபடவில்லை என்றால் சரியல்ல.

8. அந்த சொத்தை வழக்கில் சேர்த்துள்ளோம். அதிலும் பங்கு உள்ளதாக கூறிதான் வழக்கு போட்டுள்ளேன். என் தகப்பனார் கோயிலுக்கு அருகில் சொத்து வாங்கினார். அதன் விவரம் எனக்கு தெரியாது. அவ்வாறு 2 ஏக்கர் சொத்து கிரையம் பெறபட்டுள்ளது என்றும் அது எங்கள் அனுபவத்தில் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. என் அப்பா கிரையம் வாங்கியது உண்மைதான். தற்போது யார் அனுபவத்தில் அது உள்ளது என்றும் எனக்கு தெரியாது.

9. சாமிநாதனுக்கு கிரையம் கொடுத்த கிரைய பணத்தை கொண்டுதான் அந்த 2 ஏக்கர் சொத்தை என் தகப்பனார் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. அந்த கிரையத்தை ஆட்சேபனை செய்ய எனக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளும் 5 முதல் 7 பிரதிவாதிகளும் சேர்ந்து 4ம் பிரதிவாதி பெயருக்கு விடுதலைபத்திரம் எழுதிகொடுத்துள்ளது தெரியும். எங்களுக்கு பாத்தியபட்ட சொத்தையும் சேர்த்து எழுதிகொடுத்துள்ளார்.

10. 1984ல் சாமிநாதன் கிரையம் வாங்கிய சொத்து அந்த ஆவணத்தில் உள்ளதால் அதை நாங்கள் ஆட்சேபனை செய்கிறோம். 1984ல் கொடுத்துள்ள கிரைய சொத்து குறித்து எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 1984ல் என் தகப்பனார் விற்றது குறித்து எங்களுக்கு தெரியாத காரணத்தினால் அதை ஆட்சேபனை செய்யவில்லை. எங்களுக்கு விவரம் தெரிந்த காலத்திலிருந்து அதை கேட்டுக்கொண்டு தான் உள்ளோம். என் தகப்பனார் இறந்து சுமார் 18 ஆண்டுகள் ஆகிறது.

11. என் தகப்பனார் உயிருடன் இருக்கும்போது கிரைய ஆவணத்தை ஆட்சேபனை செய்து வழக்கு எதுவும் போடவில்லை. தற்போது அவற்றை ஆட்சேபனை செய்துள்ளது சட்டபடி செல்லாது என்றால் சரியல்ல. விடுதலை பத்திரத்தை ஆட்சேபனை செய்யவும் எங்களுக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. விடுதலை பத்திரம் பதிவு செய்ய சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆட்சேபனை செய்யவில்லை. அதுபற்றி தெரியாததால் செய்யவில்லை.

12. 2019ல் தான் விடுதலை பத்திரம் பற்றி தெரியவந்தது. பத்திர நகல் எடுத்து பார்த்தபோது தான் விவரம் தெரிந்தது. வா.சா.ஆ.2 ஆவணம் தான் அவ்வாறு நகல் எடுத்தது என்றால் எனக்கு படிக்க தெரியாததால் அதுபற்றி கூறமுடியாது. 2019ல் ஆண்டிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் விடுதலை பத்திரத்தை ரத்து செய்ய தனியாக வேறு வழக்கு போடவில்லை. சாமிநாதன் வகையராவிடமிருந்து தீபா என்பவர் சொத்து கிரையம் வாங்கியுள்ளார். அது சாமிநாதனின் மகனுக்கு சொந்தமான சொத்து ஆகும். அதில் அனைவரும் கையெழுத்து போட்டுள்ளார்கள்.

13.சாமிநாதன் மகனின் சொத்தை தீபா கிரையம் வாங்கியதாக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தீபா கிரையம் வாங்கிய சொத்து 200 சதுரடி என வழக்கில் கூறியுள்ளேன். பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சொல்லும் சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. சொத்தின் விஸ்தீரணம் தற்போது என்னால் சொல்லமுடியாது. வழக்குரையில் அதுபற்றி கூறபட்டுள்ளது.

14. ஆக்கிரமிப்பை பார்வையிட நீதிமன்ற ஆணையர் வேண்டும் என மனு தாக்கல் செய்யவில்லை. சொத்து விவரத்தில் ஆக்கிரமிப்பு சொத்து விவத்தை குறிப்பிடபடவில்லை என்றால் சரியல்ல. அதை ஒப்படைக்கவேண்டும் என பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. சொத்தை ஆக்கிரமிப்பு செய்ததாக வழக்கிற்காக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. ஆக்கிரமிப்பு சொத்து காலியிடமாகும். தசரதனிடம் கிரையம் வாங்கிய சொத்தில் தான் பால்ராஜ் வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல.

15.பால்ராஜின் வீடு கட்டிய சொத்தை ஆட்சேபனை செய்கிறோம் என்றால் காலியிடமாக தான் அது உள்ளது. 1984 கிரைய சொத்தில் 3/4 பாகம் எங்களுக்கு சொந்தம் என தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. சண்முகம் என்பவர் மீது இதே நீதிமன்றத்தில் வேறு வழக்கு போட்டுள்ளேன். அந்த வழக்கிற்கு எதிராக திருப்பத்தூர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு உள்ளது. இந்த வழக்கு சொத்தில் சண்முகத்திற்கு எந்த பாத்தியமும் இல்லை. அவரை தவறாக வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எந்த

பாகஉரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 29/01/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE,
VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.01.29 17:07:17
+0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.